பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 17 செவ்வாய்க்கிழமை 02.01.2023 கதிர் 417

# கிழக்கில் பெரு வெள்ளம்

## மட்டக்களப்பில் 14 பிரதேச செயலக பிரிவுகள் மூழ்கின

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரசேத செயலாளர் பிரிவுகள் வெள்ளத்தில்மூழ்கியுள்ளதோடு மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகள் பலத்த பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

தொடரும் மழை காரணமாக வெருகல் ஆறு பெருக்கெடுத்துள்ளது. இதனால் வாகரை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட கதிரவெளி, கல்லரிப்பு பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் 41 குடும்பங்களைச் சேர்ந்த 109 பேர் பாதுகாப்பாக முன்பள்ளியொன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முனைத்தீவு பட்டாபுரம், பெரியபோரதீவு,கோயில்போரதீவு போன்றபகுதிகளும்வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.காத்தான்குடியில் ஆரையம்பதி பகுதியில் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

கொழும்பில் புத்தாண்டு அரசியல் அதிர்வுடன்தான் பிறந்துள்ளது. மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் டி சில்வா ஐக்கிய மக்கள் சக்தி கட்சியுடன் நேற்று இணைந்துகொண்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்று சந்தித்த அவர், ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்கி தமது கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளதாக, அக்கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தென் மாகாண முன்னாள் முதலமைச்சராக கடமையாற்றிய ஷான் விஜயலால் டி சில்வா சிறீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர். கடந்த பொதுத் தேர்தலில் சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பட்டியலில் காலி மாவட்டத்தில் ☞ 2

## மழைக்கு வாய்ப்பு

வடக்கு கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் தொடர்ச்சியாக மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கைவிடுத்துள்ளது.

மாத்தளை, நுவரெலியா, அம்பாந்தோட்டை, ஆகிய மாவட்டங்களிலும் கடுமையான மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், வடக்கு, வடமத்தி, கிழக்கு, தெற்கு மாகாணங்களில் மணிக்கு 30 முதல் 40 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசுவதற்கான சத்தியப்பாடுகள் உள்ளன.

☞ 9

## ஷான் வருகை ஆரம்பம் மட்டுமே என்கிறது ஐக்கிய மக்கள் சக்தி



ஷான் விஜயலால் டி சில்வாவாவின் வருகை வெறும் ஆரம்பம் மட்;டுமே என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொலன்னாவவில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்க இடையிலான ☞ 9

## பாதுகாப்பு கேந்திர நிலையமாக இந்து சமுத்திரத்தில் இலங்கை


### மாற்றமடையும் என்கிறார் ஜனாதிபதி



எதிர்காலத்தில் இலங்கை இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு கேந்திர நிலையமாக மாறும்போது விமானப்படை மீது பெரும் பொறுப்பு சாரும். அதேபோல் புதிய அறிவு மற்றும் தொழில் நுட்பத்துடன் எமது படையினர் முன்னோக்கிச் செல்லவேண்டும். சர்வதே சத்தில் ஏற்படக் கூடிய மோதல்களை முன்கூட்டியே அறிந்து கொண்டு, அதற்கு தீர்வு தேடுவதற்கான பாதுகாப்பு அறிவும் அதனூடாககிடைக்கும்என்று ஜனாதிபதி ரணில் ☞ 10

## கோண்டாவில் வீட்டிலிருந்து கஞ்சா, ஹெரோயின் மீட்பு

### சந்தேகநபர்கள் இருவரும் கைது



யாழ்ப்பாணம் - கோண்டாவில்பகுதியில் உள்ள வீடொன்று பொலிஸாரால் சுற்றிவளைக் கப்பட்டு நடத்தப்பட்ட தேடுதலில் கஞ்சா மற்றும் ஹெரோயின் ஆகியன மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

500 கிராம் ☞ 8

## குடாநாட்டில் கடந்த ஆண்டு 4,269 பேருக்கு டெங்கு நோய்



யாழ் மாவட்டத்தில் கடந்த வருடம் 4269 பேர் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர்என்று யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். ☞ 8

## ரணிலுக்கு ஆதரவான கூட்டணி நேற்று உதயம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற வைப்பதற்கான புதிய கூட்டணிநேற்றையதினம் உதயமாகியுள்ளது.

இந்தக் கூட்டணிக்கான அலுவலகம் ராஜகிரியவில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்தக்கூட்டணியில் நாடாளுமன்ற உறுப்பினர்களானநிமல்லன்சா, அநுரபிரியதர்சனயாப்பா, பிரியங்கர ஜெயரத்னே ஆகியோர்பங்கேற்றனர். இந்நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டநாடாளுமன்ற உறுப்பினர்நிமல்லன்சா தெரிவித்ததாவது:

நாம் ஜனாதிபதி ரணில் ☞ 2

## வரிக் கோப்புகளின் எண்ணிக்கை 10 லட்சமாக 2023இல் அதிகரிப்பு

வரிக் கோப்புகளின் எண்ணிக்கையை 4 லட்சத்திலிருந்து ஒரு மில்லியனாக (10 லட்சங்கள்) அதிகரிக்க முடிந்துள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 2023 ஆம் ஆண்டின் மூன்றாம்காலாண்டில்1.7 சதவீதமாகஇருந்தது. அது 2023இல்முழுமையான பொருளாதார வளர்ச்சியில் மறை 3 சதவீதமாகும். அதன்படி, 2022இல்முழுமையான பொருளாதார வளர்ச்சி மறை -11 சதவீதமாகும்.

முதன்மை கணக்கு இருப்பு தொடர்ந்தும் நேர்மறை பெறுமானத்தில்உள்ளது. 2022 ஆம் ஆண்டில், இது895பில்லியன் ☞ 9

## இலங்கை கிரிக்கெட் பற்றிய அறிக்கை ஜனாதிபதியிடம்



இலங்கை கிரிக்கெட் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ☞ 2

## டெங்கு கட்டுப்பாட்டுச் சோதனை 4 பிரதேச செயலகங்களில் தீவிரம்

யாழ் மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் அதிகம் காணப்படுகிற நான்கு பிரதேசசெயலக பிரிவில்பொலிஸ்மற்றும் இராணுவத்தினரை பயன்படுத்தி டெங்கு கட்டுப்பாட்டுநடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ். நகரம், நல்லூர், கோப்பாய் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் அதிகளவானவர்கள் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து மேற்படி பகுதிகளில் டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்துவது தொடர்பில் வடமாகாண பிரதம செயலாளர் தலைமையில் ஆராயப்பட்டது. அங்கு எடுக்கப்பட்ட முடிவுகளின்படி இந்த 4 செயலாளர்பிரிவுகளிலும் நேற்று முதல் சிரமதான பணிகள்முன்னெடுக்கப்படுகின்றன

இதன்படி ☞ 9

## ஐக்கிய மக்கள் சக்தியுடன் சேர்ந்து சுதந்திர சபை பரந்துபட்ட கூட்டணி

### ஜி.எல்.பீரிஸ் நேற்று அறிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தியுடன் சுதந்திர மக்கள் சபையும் இணைந்து பரந்துபட்ட கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது என்று சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று, சுதந்திரமக்கள்சபையின் ஊடகவியலாளர் சந்திப்பு ஐக்கியமக்கள்சக்தியுடன் கரம்கோர்த்த ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார்.

அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்ததைத் தொடர்ந்து அம்பலாங்கொடை தேர்தல் தொகுதியின் பிரதான அமைப்பாளராக அவரை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நியமித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அடுத்த தேர்தலில் ஆதரவு தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் நிமல் லன்ஸா ஆகியோர் புதிய கூட்டணி அலுவலகத்தை நேற்றுத் திறந்து வைத்தனர். இதற்குப் பதிலடியாகவே ஐக்கிய மக்கள் சக்தி பெரமுன உறுப்பினர் தம்முடன் சேர்ந்துகொண்ட செய்தியை நேற்று வெளியிட்டுள்ளதுஎன்றுகூறப்படுகின்றது.

ரணிலுக்கு ஆதரவான கூட்டணியில் மூன்றாவது நபராக புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரியங்கர ஜெயரத்னேவும் சேர்ந்து கொண்டுள்ளார்.

ராஜகிரியவில் புதிய கூட்டணியின் அலுவலகம் நேற்று சம்பிரதாயபூர்வமாகத் தொடங்கப்பட்டது. இந்த அலுவலகத்தில் இருந்து கடந்த சில மாதங்களாகவே அரசியல் கூட்டணிக்கான பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன என்றாலும் நேற்றுத்தான் அது உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

''இந்த ஆண்டு தேர்தல் நடத்தப்படவேண்டும். அது ஜனாதிபதித்தேர்தலாக இருக்கவேண்டும் என்றுநான்நம்புகிறேன். ஜனாதிபதி விரும்பினால் நாடாளுமன்ற, மாகாண சபை, உள்ளூராட்சி சபைத் தேர்தல்களைக்கூட நடத்தலாம். நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்படும் என்பது எதிர்க்கட்சிகளின்கருத்து. ஜனாதிபதித் தேர்தலை ஜனாதிபதி அழைப்பார் என்பதே எனது கருத்தும்கூட.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து கடந்த தேர்தலில் 71 பேர் நாடாளுமன்றத்திற்குப் போட்டியிட்டனர். அந்த 71 பேரும் தற்போது அந்தக் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. அந்த 71 பேரையும் பிரதிநிதித்துவப்படுத்தி புதிய கூட்டணியை உருவாக்க நாடாளுமன்றத்தில் புதிய பேச்சை தொடங்கினோம்.நாடாளுமன்றத்தில் அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டணியையும், நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிக எண்ணிக்கையிலான கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டணியை நாங்கள் உருவாக்க முடியும்.

புதிய கூட்டணியின் அரசியல் நடவடிக்கைகள் இன்று (நேற்று) முதல் தீவிரமாகத் தொடங்கப்படவுள்ளன. ஜனாதிபதித் தேர்தலின்போதுஎமதுஅணியானது பரந்த அணியாக ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும்வகையில்பலமான அணியாக செயற்படும்.நாங்கள் பணியாற்றிய எல்லா இடங்களிலும் வெற்றிபெற்றோம். சிலதலைவர்கள் நாங்கள் செய்யக் கூடாது என்று சொன்னதைச்செய்து தோல்வியை ஏற்க வேண்டியதாயிற்று. நாங்கள் சொன்னதைச் செய்தவர்கள் படிப்படியாக மேலே வந்தனர். மக்களுக்கு முன்வைக்கப்பட்ட உண்மைக்கும் பொய்க்கும் இடையே தேர்தல் நடைபெறுகிறது" – என்று நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்ஸா தனது உரையில் தெரிவித்தார்.

இந்தக் கூட்டணி உருவாகப் போகின்றது என்பதையும் நிமல் லன்ஸா மற்றும் பிரியதர்சன யாப்பா ஆகியோர் இதற்காக உழைத்து வருகின்றனர் என்பதையும் இருப்பினும் இந்தக் கூட்டணிக்குத்தொடக்கத்தில்இருந்த வரவேற்பு இப்போது இல்லை என்பதையும் அவ்வப்போது எனது வாசகர்களுக்காக இந்தப் பத்தியில் தெரிவித்திருக்கின்றேன். இப்போது அது பகிரங்கமாகி இருக்கின்றது என்பதைத் தவிர இதில் வேறு பெரிய புதினங்கள் எதுவுமில்லை.

தேர்தலுக்கு இடையில் தத்தமது கூட்டணிக்கு ஆள்பிடிக்கும் வேலையை இருதரப்பினரும்வெகு தீவிரமாகச் செய்யப்போகிறார்கள் என்பதைத்தான் புத்தாண்டுச் சம்பவங்கள் உணர்த்திநிற்கின்றன.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்ட வெள்ளம் காரணமாக அப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதேநேரம் திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் தொடரும் கனமழைகாரணமாக, சேனையூர், மாவடிச்சேனை, வட்டுவன் பகுதிகள் வெள்ளத்தில்மூழ்;கியுள்ளன. குறித்த கிராமங்களில் உள்ள 46 குடும்பங்களைச்சேர்ந்த 136 பேர் பாதுகாப்பான பகுதி களில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஒலுவில் மற்றும் சம்மாந்துறை பகுதிகளிலும் வெள்ளம் காரணமாக பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதோடு காற்றுக்காரணமாக மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின் அறிக்கை நேற்று ஜனாதிபதியிடம் கைளிக்கப்பட்டது. குழுவின் தலைவரும் வெளிவிவகார அமைச்சருமான அலி சப்ரி அறிக்கையை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளித்தார்.

அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டதிலிருந்து ஒன்றரை மாதம் என்ற குறுகிய காலத்திற்குள் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 6 மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை தீர்மானத்துக்கமையவெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையில் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின்ஏனையஉறுப்பினர்களாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், தொழில் மற்றும்வெளிநாட்டுவேலைவாய்ப்பு அமைச்சர் மனுச நாணயக்கார ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் மேற்படி குழுவின் ஒருங்கிணைப்பாளராக ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் லோசினி பீரிஸ் நியமிக்கப்பட்டிருந்தார். உரிய தரப்பினருடன்இணைந்துகிரிக்கெட் விளையாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் மேற்படி குழுவினால் ஆராயப்பட்டது.

அதற்கமைய,

1. இலங்கை கிரிக்கெட்டின் உள்ளீடுகள் மற்றும் கட்டமைப்பை மறுசீரமைப்புச் செய்தல்.

2. தேசிய ஆண்கள், பெண்கள் அணி, 19 - 17 வயதுகளுக்கு கீழான பிரிவு அணிகள் உள்ளிட்ட பல்வேறு மட்டத்திலான கிரிக்கெட் வீரர்களின் நிர்வாகம் மற்றும் பயிற்சிகள், முழுமையான நலன் தொடர்பிலான வரைவு.

3. டெஸ்ட் கிரிக்கெட் அந்தஸ்துள்ள நாடுகளுடன் ஒப்பிடுகையில் வெளிப்படைத் தன்மை, தொழில்முறை மற்றும் உறுதிப்படுத்தல் ஆகியவற்றுக்கான பின்பற்றக்கூடியசரியானமுறைமை.

4. திறமை, சமத்துவம், நியாயம் ஆகியவற்றுடன் இலங்கை கிரிக்கெட்டின் மூலதனமான பாடசாலை கிரிக்கெட், மாவட்ட, மாகாண, கழக மட்ட கிரிக்கெட் விளையாட்டினை மறுசீரமைப்புச் செய்தல்.

உள்ளிட்டவிடயங்கள்தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

இதன்போது பிரச்சினைகளுக்கு காரணமாக அமைந்திருந்த விடயங்களை மீளாய்வு செய்வதற்காக விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர், இலங்கை கிரிக்கெட் நிறுவனம், இலங்கை கிரிக்கெட் குழாம் (ஆண் ஃ பெண்) பயிற்றுவிப்பாளர்கள், நடுவர்கள், கிரிக்கெட் தெரிவுக்குழு, 19 வயதுக்குட்பட்ட பிரிவின் பயிற்றுவிப்பாளர்கள், தொழில்நுட்ப ஆலோசனைக் குழு, வனிது ஹசரங்க உள்ளிட்ட தற்போதைய அணியின்உறுப்பினர்கள்,இலங்கை கிரிக்கெட் நடுவர் சங்கம், இலங்கை சட்டத்தரணிகள்சங்கம்,கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நிறுவனம், ஓய்வுபெற்றஉயர்நீதிமன்றநீதியரசர் கே.டீ.சித்ரசிறி தலைமையிலான சித்ரசிறிகுழுவினர்,கணக்காய்வாளர் உள்ளிட்ட பல தரப்பினரிடம் கருத்து கேட்டு, அவற்றை ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆய்வுகள் நடத்தப்பட்டு, சட்டத்தரணிகளான சமீர் சவாஹிர், சம்ஹான் முன்ஸீர் உள்ளிட்டவர்களின் ஒத்துழைப்புடன் ஜனாதிபதி செயலகத்தின் நாடாளுமன்ற அலுவல்கள் பிரிவினால் அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இந்த அறிக்கையைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்த அறிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்த எதிர்பார்த்திருக்கும் அதேநேரம், புதிய கிரிக்கெட் சட்டமூலத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோல் மிகவும் குறுகிய காலத்தில் அறிக்கையை சமர்பித்தமைக்காக அமைச்சரவை உப குழுவினருக்கு ஜனாதிபதி பாராட்டு தெரிவித்தார்.

## ரணிலுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கவை வெற்றி பெறச் செய்வதற்காக கூட்டணியாகியுள்ளோம். எமது கூட்டணி மேலும் விரிவுபடுத்தப்பட்டதன் பின்னர்அனைவருடன்இணைந்து எமது கூட்டணியின் பெயர் மற்றும் சின்னம்ஆகியவற்றை உத்தியோகபூர்வமாக அறிவிப்போம்.

நாம், நாட்டின் பொருளாதாரத்தினை மீட்கவல்லதலைவரை ஆதரிக்கின்றோம். அவரை வெற்றி பெறச் செய்வதற்காக உழைக்கின்றோம். அவர் ஏற்கனவே இந்த நாட்டின் பொருளாதார மீட்சித் திட்டத்தினை முன்வைத்துள்ளார். அதனை நாம் ஏற்றுக்கொண்டு அவருக்கு ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றோம்.

இதேநேரம், எதிர்காலத்தில் எம்முடன் பல இணையவுள்ளனர். அவர்களையும்அழைத்துக்கொண்டு ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் கரங்களை பலப்படுத்தவுள்ளோம்.

மேலும், தற்போது வரிச்சுமை அதிரித்துள்ளது என்று கூச்சலிடுபவர்கள், சவால்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள். அவர்கள் ஆட்சிக்கு வந்தால் பணத்தை மரத்திலிருந்து பறித்தெடுக்கப்போவதில்லை. வருமானம்ஈட்டும் வழிகளை கண்டறிய வேண்டும்.

மக்கள் வரிச்சுமையால் நெருக்கடிகளுக்குஉள்ளாகியுள்ளனர் என்பதை எற்றுக்கொள்கின்றோம். ஆனால்மக்களுக்குஉண்மையைக் கூறி, சொற்ப காலத்தில் அவர்களுக்கு நிவாரணத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்கேஇந்தநடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றார்.

## ஐக்கிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளர் ஷான் விஜயலால் டி சில்வாவுடன் கூட்டிணைந்து நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் பரந்துபட்ட கூட்டணியொன்றை அமைத்துள்ளோம். அந்தக் கூட்டணியின் ஊடாக நாட்டு மக்களைப் பாதுகாக்கும் வேலைத் திட்டத்தினையே புதிய ஆண்டில் முன்னெடுக்க வேண்டும். அதுவே எமது இலக்காகும்.

ஷான் விஜயலால் டி சில்வா எம்முடன்இணைந்துகொண்டமை எமக்குப் பெரும் சக்தியளிக்கும் விடயமாகும். ஒன்றிணைந்த ஐக்கிய முன்னணியாகப் பயணிப்பதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்துள்ளோம் என்றார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் பேசிய ஷான் விஜயலால் தெரிவித்ததாவது:

எனது அரசியல் வாழ்க்கையில் எதிரணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் முதற் தடவையாக பங்கேற்கின்றேன். அடுத்தஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறவுள்ள சஜித் பிரேமதாசவுடன் இணைந்து செயற்படுவதானது, யுகத்துக்கான தேவையாகும்.

எனது அரசியல் பயணத்தில் மிகுந்த பொறுப்புக்கள் உள்ளன. அந்தப் பொறுப்பினை நிறைவேற்றுவதாக இருந்தால் ஐக்கிய மக்கள் சக்தியுடனான பயணம் உரிய வாய்ப்புக்களை வழங்கும் என்று நம்பிக்கை கொண்டுளேன் என்றார்.

# மைத்திரியின் அறிவுரை

தற்போது நாடு பெரும் நெருக்கடிகளுக்குள் சிக்கியுள்ளது. நாடு முற்றாக வீழ்ந்துள்ளது. இந்தத் தருணத்தில் பேசவேண்டிய விடயம், ஜனாதிபதி யார், பிரதமர் யார், எதிர்க்கட்சித்தலைவர் யார் என்பதல்ல. மாறாக, தலைவர்கள் அனைவரும் தமது பதவி அதிகாரங்கள் தொடர்பில் சிந்திப்பதைக் கைவிட்டு, நாட்டின் எதிர்காலம் தொடர்பில் சிந்தனை செய்ய வேண்டும் என்று சுதந்திரக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலன்னறுவையில் செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாடு பெரும் நெருக்கடிகளுக்குள் சிக்கியுள்ளது. நாடு முற்றாக வீழ்ந்துள்ளது. இந்தத் தருணத்தில் பேசவேண்டிய விடயம், ஜனாதிபதி யார், பிரதமர் யார், எதிர்க்கட்சித்தலைவர் யார் என்பதல்ல. மாறாக, தலைவர்கள் அனைவரும் தமது பதவி அதிகாரங்கள் தொடர்பில் சிந்திப்பதைக் கைவிட்டு, நாட்டின் எதிர்காலம் தொடர்பில் சிந்தனை செய்ய வேண்டும்.

அதற்காக வெளிப்படைத்தன்மையுடன் பேசுவதற்காக ஒன்றிணைய வேண்டும். அவ்வாறில்லாது விட்டால் எவ்விதமான முன்னேற்றங்களையும் காண முடியாது. இதனைப் புரிந்து கொண்டு தலைவர்கள் முன்வரவேண்டும்.

அத்துடன் கட்சிதாவுபவர்களுக்கு மக்கள் தேர்தலில் தக்க பாடத்தினை புகட்டுவார்கள். இவ்வாறான கட்சி தாவல்கள் ஒன்றும் புதிதல்ல. அவ்வாறு கட்சி தாவுபவர்கள் தேர்தலுக்கு முகங்கொடுக்கும் போது அதற்கான பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வார்கள் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# வடக்கில் சைவ அமைப்புக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல்

## ஜனாதிபதியிடம் மகஜர் கையளிக்க நடவடிக்கை





இந்து அமைப்புக்களின் ஏற்பாட்டில், வடமாகாணத்தில் சைவ அமைப்புக்கள் எதிர்நோக்கும் சமயரீதியான பிரச்சினைகள் தொடர்பான ஆலோசனை கலந்துரையாடல் திங்கட்கிழமை நல்லை ஆதீன திருஞானசம்பந்தர் மண்டபத்தில், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த ஆலோசனை கலந்துரையாடலில், வடமாகாணத்தில் சைவ அமைப்புக்கள் எதிர்நோக்கும் 05 விடயங்கள் தொடர்பான கருத்துக்கள் கேட்கப்பட்டதுடன், அதனை நாடாளுமன்றத்தில்கொண்டுசேர்த்துஅதனை அரசமைப்பை உள்வாங்கவேண்டும், அதனைஎதிர்வரும் 06.01.2024 அன்று யாழ்ப்பாணம் வரவிருக்கும் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க அவர்களிடம் மகஜரும் கையளிக்கஉள்ளதாகசிவசேனைஅமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவித்தார்.

அந்த 05 அம்சகோரிக்கையில் -

01.பல்லாயிரம் ஆண்டுகாலமாக வரலாறு கொண்ட இலங்கையின் இந்து சமயத்துக்கு அரசமைப்பில் முன்னுரிமை அளிக்கவேண்டும்.

02.மதங்களின் மதமாற்ற முயற்சியைத்தடுப்பதற்கு நாடாளுமன்றத்தில் மதமாற்ற தடைச்சட்டத்தை இயற்றுக.

03. இந்துமதங்களும், பௌத்த மதங்களுக்கும் தெய்வமாக போற்றப்படும் பசுக்களைஎவரும்கொல்லக்கூடாது?பசுவதை தடைச்சட்டத்தை இயற்றுக.

04.ஒவ்வொரு ஆலயங்களில் நித்தியபூஜை வழிபாட்டில் பசுவை பூஜைகள் ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும்.

05. ஆரம்பமுன்பள்ளி பருவத்தில் உள்ள சிறார்களின் பசுவைபாதிப்பது பற்றிய நூல்கள் அறிமுகம்செயற்படுத்தவேண்டும். என்றவாறு காணப்படுகின்றது

இராமலிங்கேஸ்வர் அமைப்பின் செயற்பாட்டாளர் தி.சுந்தரேஸ்சன், சிவசேனை அமைப்பின் உறுப்பினர் த.புவனேந்தீரன், உருத்திரசேனை உறுப்பினர் சுஜீபன், இந்து தன்னார்ந்த தொண்டு சங்கம் தலைவர் வ.சாரகனான், திரிலங்கா புரி ஆதீனம் தி.விபுலாந்த அடியார், கோவிற்கடை ஜயப்பன் ஆலயத்தலைவர் த.கலாசாதக்குருக்கள், பசுவதை தடுக்கும் சமூக மன்ற தலைவர் ம.சிவலோகதேசிகசர்மா ஞானசீலன், உள்ளிட்ட அமைப்பின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர். (05)



## நுணாவில் சிறுவர் பூங்காவிற்கு விளையாட்டு உபகரணங்கள்

சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் சிறுவர் பூங்காவிற்கு நகர சபை முன்னாள் உறுப்பினர் அமரர் யோ.ஜெயக்குமாரின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் 27-12-2023 புதன்கிழமை ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன.

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் சாவகச்சேரியின் முன்னாள் உறுப்பினரும்,தென்மராட்சி அபிவிருத்திக்கழகத்தின் முன்னாள் தலைவருமான அமரர் யோ.ஜெயக்குமாரின் குடும்ப உறுப்பினர்கள்,

சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் நடனதேவன்,தென்மராட்சி அபிவிருத்திக்கழக பிரதிநிதிகள்,சாவகச்சேரி நகரசபையின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (05)

## இருவரை தாக்கி தங்கம், பணம் கொள்ளையிட்ட பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட நான்கு பேர் கைது

மோட்டார்சைக்கிளில் சென்ற இருவரை தாக்கி தங்க நகை மற்றும்பணத்தைகொள்ளையடித்த குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜன்ட் உட்பட நால்வர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 27 ஆம் திகதி இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது,இருகார்களில்வந்த சந்தேக நபர்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்தி இரு இளைஞர்களைத் தாக்கி தங்க நகை மற்றும் பணத்தை கொள்ளையடித்து சென்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர் .

இந்த விடயம் தொடர்பில் அனுராதபுரம் பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ள நிலையில், நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மேதிக விசாரணைகளை அனுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## பாணந்துறை – ஹொரணையில் 3 வாகனங்கள் மோதி விபத்து

### இருவர் காயம்

பாணந்துறை - ஹொரணை பகுதியில் மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறையில் இருந்து பண்டாரகம நோக்கி பயணித்த ஓட்டோ ஒன்று முன்னால் சென்ற லொறியை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிர்திசையில் வந்த கெப் வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தின்போது ஓட்டோவின் சாரதியும் மற்றுமொரு நபரும் காயமடைந்து பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

## ஷான் விஜயலால் டி சில்வா எம்.பி. ஐக்கிய மக்கள் சக்தியில் சேர்ந்தார்



நாடாளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் டி சில்வா ஐக்கிய மக்கள் சக்தியில்இணைந்து கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்துக்கு தெரிவானார். ஷான் விஜயலால் டி சில்வா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராவார். (05)

# மோசடிக்காரர்களிடமிருந்து ஆட்சியை பறிக்க மக்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்

## சரத் பொன்சேக்கா உருக்கம்

நாட்டைக் கடந்த 75 ஆண்டுகளாக ஆட்சி செய்தவர்களாலேயே இன்று இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இவ்வாண்டு தேர்தலுக்கான ஆண்டாகும்.

எனவேஅவ்வாறானமோசடிக்காரர்களான அரசியல்வாதிகளிடமிருந்து ஆட்சியைப் பறிப்பதற்கு மக்கள் அர்ப்பணிப்புடன் செயற்படாவிட்டால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ல் சரத் பொன்சேக்கா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 75 ஆண்டுகளாக ஆட்சி செய்த ஆட்சியாளர்களாலேயே நாடு இன்று இவ்வாறான நிலையில் உள்ளது. அந்த வழியில் வந்தவர்களே இன்றும் நாட்டை ஆட்சி செய்து கொண்டிருக்கின்றனர்.

எனவே அவர்களது ஆட்சியின் கீழ் குறுகிய காலத்துக்குள் இந்த நெருக்கடிகளிலிருந்து மீள முடியும் என்று மக்கள் எதிர்பார்க்கக் கூடாது.

எனவேமோசடிக்காரர்களானஅரசியல்வாதிகள் தொடர்பில் அறிந்து, அவர்களிடமிருந்து ஆட்சியைப்பறிப்பதற்குமக்கள்அர்ப்பணிப்புடன் செயற்படாவிட்டால் யார் வந்த எந்த வாக்குறுதிகளைவழங்கினாலும்நாட்டைக்கட்டியெழுப்ப முடியாது. எனவே ஊழல், மோசடியற்ற நாட்டை நேசிக்கும் தலைவரை மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

நிவாரணங்களுக்காகவும், சமுர்த்தி கொடுப்பனவுகளுக்காகவும்வாக்களித்தால் கடந்த ஆண்டைப் போன்று மீண்டும் அனைத்தையும் இழக்க நேரிடும்.

இவ்வருடம் அரசமைப்புக்கேற்ப அனைத்து தேர்தல்களும் நடத்தப்பட வேண்டும்.

ஆனால் மக்கள் சரியான பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறில்லை எனினும் மீண்டும் மக்கள் ஏமாற்றப்படுவதை எவராலும் தடுக்க முடியாது. - என்றார். (05)



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேர்தலுக்கான கட்டியம்

2024புத்தாண்டுதேர்தலுக்கானஎதிர்பார்ப்புகளோடு பிறந்துள்ளது. இந்த ஆண்டு அரசியல் மோதல்கள் தீவிரமாக இருக்கும் என்பதை ஆண்டின் முதல் நாளானநேற்றுகொழும்பில்இடம்பெற்றசம்பவங்கள் உணர்த்தி நிற்கின்றன.

அரசுத்தலைவர்ரணில்விக்கிரமசிங்கவுக்குஆதரவு தெரிவித்து புதிய கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. அதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று விடுக்கப்பட்டதுடன் அலுவலகமும் ராஜகிரியவில் திறந்து வைக்கப்பட்டது. சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான அனுர பிரியதர்சன யாப்பா இந்தக் கூட்டணியின் தலைவராக இருப்பார். பெரமுனவின் மற்றைய இரு நாடாளுமன்ற உறுப்பினர்களான நிமல் லன்சா, பிரியங்கர ஜெயரத்னே ஆகியோரும் இந்தக் கூட்டணியில் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் கூட்டணி எதிர்வரும் நாட்களில் மேலும் பலரையும் உள்ளடக்கி விரிவாக்கப்படும் என்று நாடாளுமன்றஉறுப்பினர்நிமல்லன்சாதெரிவித்தார். ''நாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெறச்செய்வதற்காககூட்டணியாகியுள்ளோம். எமதுகூட்டணிமேலும்விரிவுபடுத்தப்பட்டதன்பின்னர் அனைவருடனும் இணைந்து எமது கூட்டணியின் பெயர் மற்றும் சின்னம் ஆகியவற்றை உத்தியோக பூர்வமாக அறிவிப்போம்'' என்றார் அவர்.

இதற்குப்பதிலடியாகஎதிர்ப்புறத்தில்ஐக்கியமக்கள் சக்தியும்சுதந்திரமக்கள்சபையும்இணைந்துதமது கூட்டணிக்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளன. சுதந்திரக்கட்சியின்உபதவிசாளரும்பெரமுனவின் நாடாளுமன்றஉறுப்பினருமானஷான்விஜயலாலும் இந்தக் கூட்டணியில் இணைந்துள்ளார் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

''பிரதானஎதிர்க்கட்சியானஐக்கியமக்கள்சக்தியுடன் பரந்துபட்ட கூட்டணியொன்றை அமைத்துள்ளோம். அந்தக் கூட்டணியின் ஊடாக நாட்டு மக்களைப் பாதுகாக்கும் வேலைத்திட்டத்தினையே புதிய ஆண்டில் முன்னெடுக்கவேண்டும். அதுவே எமது இலக்காகும்'' என்று தமது புதிய கூட்டணி குறித்து நேற்று அறிவித்தார் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

இவ்வாறு இரு பிரதான தரப்புக்களும் இந்த ஆண்டில் தேர்தலை எதிர்கொள்வதற்கான தயார்ப்படுத்தல்களோடு புத்தாண்டை எதிர்கொண்டுள்ளன. கூட்டணிகள் மட்டுமல்ல, இந்தத் தை மாதத்தில் தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்வதற்கும் கட்சிகள் திட்டங்களை வகுத்துள்ளன. தேர்தல் எதுவும் இன்னும் அறிவிக்கப்படவில்லை என்றாலும் எந்தத் தேர்தலையும் எப்படியும் எதிர்கொள்வது என்பதில் கட்சிகள்தீவிரமாகவும்தீர்க்கமாகவும்இருக்கின்றன என்பதையே இது காட்டுகின்றது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கு மக்கள் ஆணை மிக்க ஆட்சி ஒன்று பதவியில் இருப்பது முக்கியம் என்பதால் தேர்தலை மக்களும்ஆவலோடுஎதிர்பார்த்திருக்கிறார்கள். இந்த நெருக்கடிக்குக்காரணமானவர்களுக்குத்தண்டனை வழங்கும்கோபத்தோடுகாத்திருக்கும்அவர்களுக்குத் தமதுகோபத்தைவெளிப்படுத்துவதற்கானவாய்ப்பாக இந்தத் தேர்தல் மட்–டுமே இருக்கின்றது. எனவே அடுத்தஅதிகாரத்தைக்கைப்பற்றும்இந்தப்போட்டியே இந்த ஆண்டில் முதன்மை பெறப்போகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

பொருள்களின் விலைவாசி உயர்வு, வருமானமின்மை என்பவற்றுக்கு மத்தியில் இந்த அரசியல் களத்தின் மீதும் மக்கள் தமது முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டியவர்களாக இருக்கின்றனர்.



# போதை அடிமைகளுக்கு மறுவாழ்வு உண்மையில் கிடைக்கிறதா?

**கமந்தி விக்கிரமசிங்கே**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2019இல், பிலிப்பைன்ஸிற்கான தனது பயணத்தின்போது, அந்த நாட்டு ஜனாதிபதி ரோட்ரிகோ டுடெர்ட்டின் போதைப்பொருள்



அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த எடுத்த அணுகுமுறையைப் பாராட்டினார். அந்த நேரத்தில் ஆயிரக்கணக்கான நீதிக்குப் புறம்பான படுகொலைகளுக்கு வழிவகுத்த ஓர் அணுகுமு–றை அது. அந்த நீதிக்குப் புறம்பான கொலைகள் உலகத்திற்கே முன்னுதாரணமாக திகழ்வதாகத் தெரிவித்த சிறிசேனா, இலங்கையில் போதைப்பொருள்அச்சுறுத்தலை ஒழிப்பதற்கு இதேபோன்ற அணுகுமுறைகளைக் கடைப்பிடிப்பது குறித்து பரிசீலிக்க வேண்டும்என்றும்தெரிவித்தார்.

அப்போதிருந்து, இலங்கையில் 'போதைக்கு எதிரான போர்' மிகவும் கொடூரமான மற்றும் அசிங்கமான திருப்பத்தை எடுத்தது. போதைப்பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த இலங்கை இராணுவமயமாக்கப்பட்ட அணுகுமுறையை ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல், புனர்வாழ்விற்காக அனுப்பப்படும் பல போதைப் பொருள் குற்றவாளிகளின் உரிமைகளையும் ஏற்கனவே மீறியுள்ளது. தற்போது நிலைமையை மேலும்மோசமாக்கும்வகையில், பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ், போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளைக் கைது செய்ய 'அதிகபட்ச பலம்' பயன்படுத்தப்படும்என்றும், ஜூன் 30, 2024க்குள்போதைப்பொருள் அச்சுறுத்தலை முழுமையாக முடிவுக்குக் கொண்டுவர பாதாள உலகக் குழுவினருக்கு இறுதி எச்சரிக்கைவிடுக்கப்படும்என்றும் கூறினார்.

''ஓர் முறிந்த அமைப்பு: போதைப்பொருள் கட்டுப்பாடு, இலங்கையில் போதைப் பொருட்களைப் பயன்படுத்தும் நபர்களைத் தடுத்து வைத்தல் மற்றும் சிகிச்சை செய்தல்'' என்ற தலைப்பிலான தனது ஆய்வில், முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் அம்பிகா சத்குணநாதன், நாட்டில் போதைப்பொருள் தடுப்பு அணுகுமுறைகளில் நிலவும் கொடூரங்கள் பற்றிய விரிவான பார்வையை முன்வைக்கிறார்.

சட்டத்தின் அடிப்படையில், போதைப்பொருள்சார்ந்தநபர்கள் (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) சட்டம் (2007 இன் இலக்கம் 54) இலங்கையில்போதைப்பொருள் மறுவாழ்வுக்கான சட்டக் கட்டமைப்பை நிர்வகிக் கிறது. சட்டத்தின் பிரிவு 10, போதைப்பொருள்



உட்கொண்டதாக சந்தேகிக்கப்படும் எந்தவொரு நபரையும் மருத்துவ மதிப்பீட்டிற்கு அனுப்ப காவல்துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கிறது, பின்னர் அந்த நபரை நீதிவான் முன் நிறுத்தவும். பிரிவு 10 (4) ஒரு நீதிவான் ஒரு நபரை கட்டாய போதைப்பொருள் மறுவாழ்வுக்காக அனுப்பவும் அனுமதிக்கிறது. ஒரு சட்ட மருத்துவ அதிகாரியால் நடத்தப்படும் மருத்துவ மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த நபர் போதைப்பொருளுக்கு அடிமை என்று மதிப்பிடப்படுகிறார் அல்லது ஒரு குற்றத்திற்கான தண்டனையாக விசம், அபின் மற்றும் ஆபத்தான மருந்துகள் கட்டளைச் சட்டத்தின் கீழ். பிரிவு 10, ஆதாரங்கள் இல்லாமல் கைது செய்ய, தன்னிச்சையாக ஒரு நபரை தடுத்து வைக்க, இறுதியில் அந்த நபரை கட்டாய போதைப்பொருள்மறுவாழ்வுக்கு அழைத்துச் செல்ல அனுமதியளிக்கிறது.

அவரது ஆய்வில், சர்வதேச மனித உரிமைகள் அடிப்படையிலான மருந்து சிகிச்சைக்கான மனித உரிமைகள் அடிப்படையிலான பொது சுகாதாரஅணுகுமுறையைஊக்குவிப்பது விளக்கப்படுகின்றது. இதில் சமூக அடிப்படையிலான சிகிச்சை மற்றும் கவனிப்பு, சான்று அடிப்படையிலான மருந்துகள் மற்றும் தீங்கு குறைப்பு தலையீடுகள் ஆகியவை அடங்கும். சிகிச்சைக்கான ஒப்புதல் மற்றும் எந்த நேரத்திலும் சிகிச்சையிலிருந்து விலகு–வதற்கான உரிமையும் இந்த அணுகுமுறையில் அடங்கும். இத்தகைய சிகிச்சைகள் வெளித் தலையீடுகள் இல்லாமல் ஒருவரின் விருப்பத்தின் அடிப்படையில் மட்டுமே இடம்பெறவேண்டும். இலங்கை போன்ற மனித உரிமைகளை மீறும், சித்திரவதைகள் இடம்பெறும் நாட்டில் கட்டாய இழிவான சிகிச்சை புதிதல்ல என்பதையும் அவரது ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது.

கட்டாய போதைப்பொருள் சிகிச்சை மற்றும் மறுவாழ்வு என்பது சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுக்கு முரணானது. அது போதைப் பொருள் பயன்பாட்டாளர்கள் மீது தன்னிச்சையான தடுப்புக் எகாவலை உருவாக்குகிறது, அத்துடன் உயர்தரமான சுகாதார பராமரிப்புக்கான அவர்களது உரிமையை மீறுவதாகவும் அமைகின்றது. ''கொரோனா பெருந்தொற்று தொடங்கியதிலிருந்து, அரசின் முக்கிய உறுப்பினர்களும் ஜனாதிபதியும், போதைப்பொருள் குற்றங்களுக்காகத் தண்டனை பெற்ற நபர்களைச் சிறைக்குப் பதிலாக புனர்வாழ்வுக்கு அனுப்ப முன்மொழிந்தார்கள், சிறைச்சாலைகளில் நெரிசலைக் குறைக்க. இந்த அணுகுமுறை பின்பற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டது. மறுவாழ்வு என்றபெயரில்போதைப்பொருள் ஒழிப்புக்கான இராணு–வமயமாக்கப்பட்ட அணுகுமு–றையின் விரிவாக்கமாக இந்த நடவடிக்கைகள் அமையும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்றுஅம்பிகாவின்அந்தஆய்வு மேலும் கூறுகிறது.

(7ஆம் பக்கம் பார்க்க...)

# புத்தி சாதூரியத்துடன் புத்தாண்டில் செயற்படுக

## கரு ஜயசூரிய 'அட்வைஸ்



இலங்கையர்களாகிய எமக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததும், பாரிய சவால்களை வெற்றிக்கொள்ள வேண்டியதுமான புதிய ஆண்டு மலர்ந்துள்ளது.

இந்தச் சவால்களை வெற்றிக் கொள்வதற்கு கடந்த கால தவறுகளை சரி செய்து கொண்டு, பிரச்சினைகளையும் சிக்கல்களையும் கண்டு உணர்ச்சிவசப்படாமல் புத்தி சாதூரியத்துடன் செயற்பட வேண்டும் என்ற உறுதியை நாம் மனதில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பிறந்திருக்கும் 2024 ஆம் ஆண்டுக்கான வாழ்த்து செய்தியிலேயே இதனை கூறியுள்ளார்.

மேலும், 2024 ஆவது வருடம் தேர்தல் வருடமாக அமைகின்றமையால் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் போது அரசியல் பாகுபாடு இன்றி மரியாதைக்குரியவர்களைத் தெரிவு செய்வதற்கு அறிவார்ந்த மக்கள் நடவடிக்கை செய்ய வேண்டும்.

தனித்திருந்து சவால்களை வெற்றிக்கொள்ள முடியாது என்பதை கடந்த வருடங்கள் நமக்கு உணர்த்தியுள்ளது. இந்த சமூகத்தில் வாழ்வது நான், நீ, நாம் எனும் பிம்பங்களே. பரஸ்பர மரியாதையுடன் மற்றவர்களின் எண்ணங்களைப் புரிந்து கொண்டு செயற்படுவதின் ஊடாக சுபிட்சமான தேசத்தைக் கட்டமைக்க முடியும் என்பது எமது நம்பிக்கையாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் சமூகத்தில் பலர் அதிர்ச்சியில் உள்ளனர்.

ஆகையால் மற்றவருக்கு அதிர்ச்சியைவிளைவிக்கும்நடவடிக்கைகளில் நாம் ஈடுபட கூடாது. ஊழல் மற் றும் மோசடிகளுக்கு எதிராக செயற்பட வேண்டும். சரியான கொள் கைகளுக்காகவும் நியாயமான கோரி க்கைகளுக்காகவும் அனைவரும் அர்ப்பணிப்புடன்செயற்படவேண்டும்.

கடந்த ஆண்டில் போக்குவரத்து மற்றும் சுகாதாரத் துறைகளில் ஏற்பட்ட வேலை நிறுத்தங்களின் காரணமாக அப்பாவி மக்கள் நெருக்கடிக்கு உள்ளான விதத்தை நாம் கண்டோம்.

ஆகையால்மக்களைநெருக்கடிக்கு உள்ளாக்கும் விதத்தில் திடீரென மேற்கொள்ளும் அநீதியான வேலை நிறுத்த போராட்டங்கள் போன்ற விடையங்களின் போது நடுநிலையாக சிந்தித்து, மலரவிருக்கும் புதிய வருடத்தில் சரியான சிந்தனையுடன் செயற்படுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

தேசியமற்றும்மதநல்லிணக்கத்தை கருத்தில் கொண்டு, சக மனிதனை சமமாக கருதும், சமூக நீதி மலரும் வகையில் படிப்படியாக இலங்கை தேசத்தைக் கட்டி எழுப்பும், மக்கள் மீது சுமத்தப்பட்ட பொருளாதார மற்றும் மன அழுத்தங்கள் இல்லாதொழியும் புதிய வருடமாக அமைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை, இலங்கையர் மற்றும் உலகெங்கும் வாழும் அனைவரினதும் நேர்மையை எதிர்பார்ப்புகள் நிறைவேறும் புது வருடமாக அமைய பிரார்த்திக்கின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.(05)

# பெண் மீது கத்திக்குத்து முல்லைத்தீவில் துயரம்

முல்லைத்தீவில் குடும்ப பெண்மீது கணவர் நடத்திய கத்திக்குத்து தாக்குதல் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு முன்பாக ஞாயிற்றுக்கிழமை குறித்த பெண் நின்றுக்கொண்டிருந்தார் எனவும், இதன்போதே கணவரால் கத்திக்குத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், படுகயாமடைந்தபெண் ஆபத்தானநிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

முல்லைத்தீவு செல்வபுரத்தினை சேர்ந்தகணவன், குடும்ப முரண்பாட்டால் குடும்பத்தினரை விட்டுபிரிந்து வாழ்ந்துள்ள நிலையில் மனைவியிடம் ஏற்பட்ட முன்கோபம் காரணமாக, மனைவி மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக நின்றவேளை கத்தியால் தாக்கியுள்ளார்.

சம்பத்தில் கழுத்தில் கத்திக்குத்து இடம்பெற்று ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் வருகை தந்து கணவனை கைதுசெய்துள்ளனர் எனப்பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளார்கள். (05)

# வரி செலுத்தாத எந்தவொரு நிறுவனமும் வரி வலையில் சிக்காமல் ஒளிய முடியாது

## ஆஷு மாரசிங்க தெரிவிப்பு



திங்கட்கிழமை முதல் வரி செலுத்தாத எந்தவொரு நிறுவனமும் வரி வலையில் சிக்காமல் ஒளிந்து கொள்ள இடமளிக்கப்பட மாட்டாது என நாடாளுமன்ற விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் ஆஷு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தவில்இடம்பெற்றமத்தியகூட்டமொன்றில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் அவர் அறியத்தருகையில் -

வரி செலுத்துபவர்கள் யார், யார் வரி செலுத்துவதில்லை என்பதை ஆராய்வதற்கான முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்படும் வரி வருமானம் 2850 பில்லியன் ரூபாவாக இருந்தாலும் அதனை 3000 பில்லியனாக தாண்டும் நிலையில் உள்ளது.

அதிபரின் திறமையான பொருளாதார முகாமைத்துவத்தால் இந்த நிலைமை எட்டப்பட்டதோடு, மூன்று லட்சம் கோடியை வசூலித்தமை பெரும் சாதனை ஆகும்.

அத்துடன், வரிக் கோப்புகளை மறைக்கும் திட்டத்தில் 27 நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளதோடு, அந்த நிறுவனங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது. - என வலியுறுத்தியுள்ளார்.(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 200/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikathir

# ஹெரோயின் போதைபொருளுக்கு அடிமையான தாய், மகன் கைது

பண்டாரவளை ஹீல் ஓயா பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையில் ஹெரோயின்போதைக்குஅடிமை யாகி ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்ட 38 வயதுடைய தாய் மற்றும் அவரது 16 வயது மகனும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், அவர்களது கையடக்கத் தொலைபேசிகளை சோதனையிட்ட போது, குறித்த பெண், அவரது 16 வயது மகனின் இரு பாடசாலை நண்பர்கள் இணைந்து போதைப்பொருள் பாவிக்கும் காட்சிகளும் கிடைத்துள்ளன எனப் பொலி-ஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, போதைபொருள் பாவனையில் ஈடுபட்ட குறித்த பெண்ணின்மகனின்நண்பர்கள் இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணின் கணவர் வெளி நாடுக்கு சென்றிருந்த வேளை, மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானநண்பருடன்குறித்த பெண் தொடர்பு வைத்துள்ளார்.

இந்நிலையில், வீட்டில் இருந்த பொருள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன எனக் கணவர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற் கொள்ளப் பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்த விடயங்கள் தெரியவந்துள்ளன. (05)

# கூலித் தொழிலாளர்கள் நால்வர் மீது தாக்குதல்

அம்பாறையில் மின்சார சபைக்கு சார்பாக மரக் கிளைகளை வெட்டுகின்ற கூலி தொழிலாளர்கள் நால்வர் தாக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வைத்தியசாலை வீதியில் உள்ள வீடு ஒன்றின் அருகில் மின்சார கம்பிகளுக்கு இடையூறாக அமைந்த மரம் ஒன்றின் கிளைகளை வெட்டி கொண்டிருந்தபோதே தாக்குதல் இடம் பெற்றதாக கூறப்படுகின்றது.

வாகனத்தில் ஆள்களை அழைத்து வந்த நபர்களால் சரமாரியாகத் தாக்கப்பட்டதாக வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ள தொழிலாளர்கள்மூவர்ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நான்காவது தொழிலாளர் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொலிஸாரால் விசாரணைக்காக அழைத்து செல்லப்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தாக்குதலை நடத்தியவர் இப்பிரதேசத்தை சேர்ந்த பிரபல வர்த்தகர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (05)

# மதுபானம் மற்றும் சிகரெட்டின் விலையும் அதிகரிக்கப்பட்டது

## அரசின் புது வருடப் பரிசில்

வற் வரித் திருத்தத்திற்கு அமைய மதுபானம் மற்றும் சிகரெட் விலைகளும் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மதுபானங்களின் விலையில் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என டிஸ்டில்லரீஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி, 750 மில்லி லீற்றர் மதுபான போத்தல் ஒன்றின் விலை 90 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆண்டின் முதல் நாளிலேயே எரிபொருள் விலை அதிகரிப்பு

ஆண்டின் முதல் நாளிலேயே எரிபொருள் விலை அதிகரிப்பு

இதேவேளை, மது வரி மற்றும் வற்வரி அதிகரிப்புடன் சிகரெட்டின் விலை 4 வகைகளின் கீழ் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சிகரெட்டின் விலை 5 ரூபா, 15 ரூபா, 20 ரூபா மற்றும் 25 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# சுகாதாரத்துறையில் வருடாந்தம் 600 முறைப்பாடுகள் பதிவு

நாட்டில் சுகாதாரத் துறையில் வருடாந்தம் சுமார்600முறைப்பாடுகள் பதிவுசெய்யப்படுகின்றன என சுகாதார அமைச்சர் ரமேஷ்பத்திரன தெரிவித்தார்.

இந்தமுறைப்பாடுகளில் மருத்துவர்கள் உட்பட சுகாதார ஊழியர்கள் சம்பந்தப்பட்டுள்ளார்கள் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

பேராதனை போதனா வைத்தியசாலையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுகாதாரத்துறையில் மருத் துவ அலட்சியம் தொடர்பான முறைப்பாடுகள், தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன என சுகாதார அமைச்சர் இதன்போது கவலை வெளியிட்டார்.

இது நோயாளிகளின் நலனில், சுகாதாரத்துறையின்அர்ப்பணிப்பு பற்றிய கேள்விகளை எழுப்புகிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், நோயாளிகளின் முறைப்பாடுகளின் முழுமையான பகுப்பாய்வில் பல தவறுகள் கண்டறியப்பட்டன எனவும் அமைச்சர் பத்திரன சுட்டிக்காட்டினார்.

எனவே, சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில், மக்களுக்கான சேவையை முன்னுரிமைப்படுத்துமாறும், நோயாளிகளின் நல்வாழ்வை உறுதி செய்வதில், அர்ப்பணிப்பை மறுபரிசீலனை செய்யுமாறும் அமைச்சர் பத்திரன சுகாதாரபணியாளர்களை வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# கொழும்பில் சூடு ஒருவர் காயம்



கொழும்பு - பாலத்துறை பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தநிலையில்வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப்பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)




## கோண்டாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



கேரள கஞ்சா, 100 கிராம் ஹெரோயின், ஆறு போதை மாத்திரைகள், போதை மருந்தேற்ற பயன்படுத்தப்படும் ஊசிகள் என்பன மீட்கப்பட்டதுடன் சந்தே கநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

முன்னதாக நீண்ட காலமாக கோண்டாவில் செபஸ்டியன் வீதியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டார் என்று சந்தேகிக்கப்பட்ட நபர் ஒருவர் 50,000 ரூபாய் பணத்துடன் நேற்று யாழ்ப்பாண பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வாளர்களால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் மேற்கொள் ளப்பட்ட விசாரணைகளையடுத்து சந்தேகநபரின் வீடு கோப்பாய் பொலிஸார் மற்றும் மோப்ப நாய் சகிதம் தீவிர தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போதே வீட்டிலிருந்து கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன. வீட்டிலிருந்த மற்றொருவரும் கைது செய்யப் பட்டார்.

கைது செய்யப்பட்டவர்கள் 24 மற்றும் 21 வயதானவர்கள் என்றும் அவர்களில் ஒருவர் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் எனவும் போதைப்பொருள் வியாபாரி எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக நடவடிக்கைக்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலையில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த மாதம் டிசெம்பரில் அதிகளவில் டெங்கு நோயாளிகள் இனங்காணப் பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் கடந்த வருடம் 2505 பேர் டெங்கு காய்ச்சலுக்கு சிகிச்சை பெற்றுள்ளனர். கடந்த டிசெம்பர் மாதம் 3 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன.

2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்டவர்களின் எண் ணிக்கை ஆயிரத்தால் அதிகரித் துள்ளது.

கடந்த மாதம் பெய்த தொடர்ச் சியான மழை காரணமாக டெங்கு பரவல் அதிகரித்தது. யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இடங்களில் டெங்குநுளம்பின் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத் தில் டெங்கு காய்ச்சல் அதிகரித் துள்ள நிலையில் பொதுமக்கள் தங்கள் உடல்நிலை தொடர்பாக கவனம் செலுத்தவேண்டும். எனவே பொதுமக்கள் தங்கள் சார்ந்த இடங்களை சுத்தமாக வைத்தி ருக்க வேண்டும் - என்றார்.-




காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதி ரணில் தனது பணியாளர்களுடன் புத்தாண்டில் கடமைகளை ஆரம்பித்துள்ளார்





ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 2024ஆம் ஆண்டு புத்தாண்டில் தனது கடமைகளை ஆரம்பித்துவைத்தன் பின்னர், திங்கட்கிழமை முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் அமைச்சர்கள் மற்றும் அவரது ஊழியர்களைச் சந்தித்தார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க புதிய வருட கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக, தேசிய கொடியை ஏற்றிவைத்த பின்னர், நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கு 01 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் ஜனாதிபதி அலுவலக ஊழியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரச சேவை உறுதிமொழியை எழுத்துக்கொண்டனர்.

தனது ஊழியர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்த ஜனாதிபதி அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார். சவால்களை சரியாகப் புரிந்துகொண்டு 2024 இல் நாட்டை வெற்றிப் பாதைக்கு கொண்டு செல்வதற்கு நம்பிக்கையான மனப்பான்மையுடனும் உறுதியுடனும் அனைவரும் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அமைச்சர்கள் மற்றும் ஊழியர்களுடன் தேநீர் விருந்துபசாரத்தில் கலந்து கொண்டார்.

அமைச்சர் பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஹொான் சேமசிங்க, கனக ஹேரத், நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, பொருளாதார விவகாரங்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, ஜனாதிபதியின் நாடாளுமன்ற விவகார ஆலோசகர் ஆஷு மாரசிங்க, ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய மற்றும் ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.(05)

## இலங்கை சமூகப் பொலிஸ் குழுக்களை வலுப்படுத்த ஒத்துழைப்பு வழங்கப்படும்

### கனடாவின் பொலிஸ் பிரதானி நிஷான் துரையப்பா உறுதி

இலங்கையின் சமூக பொலிஸ் குழுக்களை மேலும் வலுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக கனடாவின் பீல் பிராந்தியத்தின் பொலிஸ் பிரதானி நிரான் துரையப்பா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கனடாவின் பீல் பிராந்திய பொலிஸ் பிரதானி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸை சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுப்பட்டார்.

இதன்போது, இரு நாடுகளின் பாதுகாப்பு தொடர்பான பல வியடங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அலஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக பொலிஸ் பிரிவுகளை வலுப்படுத்தும் வேலைத்திட்டம் தொடர்பில் கனேடிய பொலிஸ் பிரதானி பாராட்டுக்களை தெரிவித்தார். இத்திட்டத்தை மேலும் வலுப்படுத்த ஆதரவை வழங்குவதாகவும் உறுதியளித்தார். அத்துடன் இரு நாடுகளின் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பிலும் பல முக்கிய விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

1973 ஆம் ஆண்டு இலங்கையில் பிறந்த நிரான், 1975 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட யாழ்ப்பாணத்தின் முன்னாள் மேயர் அல்பிரட் துரையப்பாவின் உறவினராவார். இவர் கனடாவின் டொரண்டோ பல்கலைக்கழகத்தில் பட்டதாரி ஆவார்.

தற்போது கனேடிய பீல் பிராந்திய பொலிஸ் பிரதானியாக கடமையாற்றிய நிரான் இலங்கைக்கு பெருமை சேர்ப்பதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்திற்கு வருகை தந்த நிரான் துரையப்பாவுக்கு விசேட பொலிஸ் மரியாதை செலுத்தப்பட்டதுடன் விஜயத்தை நினைவு கூரும் வகையில் விசேட நினைவு சின்னங்களும் வழங்கப்பட்டன. (05)

## லொறி மரத்தில் மோதியதில் இருவர் சாவு ; இருவர் காயம்

கட்டுவன - ஊருபொக்க வீதியில் லொறி ஒன்று மரத்தில் மோதி இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி எதிரில் இருந்த மரத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தின் போது லொறியில் பயணித்த நால்வரும் காயமடைந்து கட்டுவன வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து ஏனைய மூவரும் வலஸ்முல்ல வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் மற்றுமொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் வலஸ்முல்ல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இருவரும் மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

### எந்தவொரு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளர் ஷான் விஜயலால் டி சில்வாவுடன் கூட்டிணைந்து நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் பரந்துபட்ட கூட்டணியொன்றை அமைத்துள்ளோம். அந்தக் கூட்டணியின் ஊடாக நாட்டு மக்களைப் பாதுகாக்கும் வேலைத்திட்டத்தினையே புதிய ஆண்டில் முன்னெடுக்க வேண்டும். அதுவே எமது இலக்காகும்.

ஷான் விஜயலால் டி சில்வா எம்முடன் இணைந்துகொண்டமை எமக்குப் பெரும் சக்தியளிக்கும் விடயமாகும். ஒன்றிணைந்த ஐக்கிய முன்னணியாகப் பயணிப்பதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்துள்ளோம் என்றார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் பேசிய ஷான் விஜயலால் தெரிவித்ததாவது:

எனது அரசியல் வாழ்க்கையில் எதிரணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் முதற் தடவையாக பங்கேற்கின்றேன். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறவுள்ள சஜித் பிரேமதாசவுடன் இணைந்து செயற்படுவதானது, யுகத்துக்கான தேவையாகும்.

எனது அரசியல் பயணத்தில் மிகுந்த பொறுப்புக்கள் உள்ளன. அந்தப் பொறுப்பினை நிறைவேற்றுவதாக இருந்தால் ஐக்கிய மக்கள் சக்தியுடனான பயணம் உரிய வாய்ப்புக்களை வழங்கும் என்று நம்பிக்கை கொண்டுளேன் என்றார்.

### மழைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தவிர்ப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பொதுமக்கள் கருத்தில் கொண்டு பின்பற்ற வேண்டும் என்றுள்ளது.

### வரிக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா எதிர்மறை பெறுமானத்தில் இருந்தது. இது நவம்பர் மாத நிலவரப்படி 333 பில்லியன் ரூபா என்ற நேர்மறையான எண்ணிக்கையாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணைக் கடனைப் பெற்ற பின்னர், வெளிநாட்டுக் கையிருப்பு 4 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டும். சர்வதேச நாணய நிதியத்திலிருந்து 337 மில்லியன் அமெரிக்க டொலர்கள், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 220 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் உலக வங்கியிடமிருந்து 250 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கின்றன.

பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்தில் பேண முடிந்துள்ளது. 2022இல் பணவீக்கம் 70 சதவீதமாக இருந்தது. இது 2024 இல் 5 சதவீதமளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நாட்டில் வணிக நம்பிக்கையை வளர்ப்பதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும்.

2023ஆம் ஆண்டில் அரச வருமானம் 3110 பில்லியன் ரூபாவாகும். அதன்படி, 2023ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு 2850 பில்லியன் ரூபாவாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் இது அரசின் வருமானத்தில் 11.2 சதவீதமாகும். 2026இல் 15 சதவீத வளர்ச்சியை எட்ட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

இந்நாட்டு வரி கோப்பு எண்ணிக்கையின் வளர்ச்சி 2019இல் பதிவுசெய்யப்பட்ட மொத்த வரி செலுத்துவோர் எண்ணிக்கை 17 லட்சத்து 5 ஆயிரத்து 233 ஆகும். பல்வேறு கொள்கை ரீதியிலான முடிவுகளால், 2020இல் 6 லட்சத்து 77 ஆயிரத்து 613 ஆகக் குறைந்துள்ளது. 2021இல், அது 5 லட்சத்து 7 லட்சத்து 85 ஆக இருந்தது. 2022இல் 4 லட்சத்து 37 ஆயிரத்து 547 ஆக இருந்த வரிக் கோப்புகளின் எண்ணிக்கையை ஒரு மில்லியனாக அதிகரிக்க முடிந்துள்ளது.

நிலுவையில் உள்ள அனைத்து கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டுள்ளன. தற்போதைய ஆட்சி பதவிக்கு வந்த போது 350 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான கட்டணங்கள் செலுத்தப்படாமல் இருந்தன. 2023 டிசெம்பர் 15, ஆகும்போது, அங்கீகரிக்கப்பட்ட அனைத்து திட்டங்களுக்கான கொடுப்பனவுகளையும் முழுமையாக செலுத்த முடிந்துள்ளது.

2024 முதல், ஒரு மாதத்திற்கு மேல் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படாத வகையில் கொள்கை ரீதியான இணக்கப்பாட்டுடன் எமது ஆட்சி செயல்பட்டு வருகின்றது. மேலும், 2024ஆம் ஆண்டிற்கான அஸ்வெசும கொடுப்பனவுகளுக்கான விண்ணப்பங்கள் ஜனவரி இறுதியில் அல்லது பெப்ரவரி மாதம் ஆரம்பத்தில் கோரப்படவுள்ளன. 14 லட்சத்து 10 ஆயிரத்து 64 பேருக்கு டிசெம்பர் மாத கொடுப்பனவையும் எம்மால் செலுத்த முடிந்தது.

20 இலட்சம் பேருக்கு இந்த நிவாரணங்களை வழங்குவதே எமது இலக்கு. 2023ஆம் ஆண்டில் ஏற்பட்ட சில குறைபாடுகளைத் தவிர்த்து நிவாரணங்களைப் பெற வேண்டிய குழுவைக் கண்டறிந்து அவர்களுக்கு சலுகைகளை வழங்க அரசு தயாராகி வருகிறது என்றார்.

### ஷான் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிநேகபூர்வான கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவரான பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் நேற்று ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்டமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தியைப் பொறுத்தவரையில் எந்தத் தேர்தலுக்கும் எமக்குப் பயமில்லை. நாம் அத்தனை தேர்தலையும் முகங்கொடுப்பதற்கு தயாராகவே உள்ளோம். எமது செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது.

தற்போது ஷான் விஜயலால் டி சில்வா எம்முடன் இணைந்துள்ளார். அவர் விருப்பு வாக்குகளை அதிகரித்துக்கொள்வதற்காக எம்முடன் இணைந்து கொள்ளவில்லை. நாட்டில் உண்மையான மாற்றத்தினை ஏற்படுத்துவதற்காகவே எம்முடன் இணைந்து கொண்டுள்ளார்.

இதுபோன்று அடுத்து வரும் காலத்தில் பலர் எம்முடன் இணைந்துகொள்வார்கள். எமது திட்டங்களை புரிந்துகொண்டவர்கள் எம்முடன் கைகோர்க்கின்றபோது நாம் நிச்சயமாக நாட்டில் மாற்றத்தினை ஏற்படுத்துவோம் என்றார்.

### டெங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைக்காதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் பணிக்கப்பட்டது.

சுகாதார திணைக்களம், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார், இராணுவம் ஆகியோரை குறித்த நடவடிக்கையில் ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

அது தவிர டெங்கு நோய் ஏற்படுகின்ற பகுதிகளில் காணப் படுகின்ற குப்பைகள் அகற்றப்பட வேண்டும்.

பொதுமக்கள் டெங்கு நோய் பரவும் பகுதிகளை இல்லாதொழிக்க சகலவிதமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். தங்கள் வீட்டு அயல் பகுதிகளில் காணப்படுகின்ற தேவையற்ற பொருட்கள் அகற்றப்பட வேண்டும். மற்றும் டெங்கு நோய் பரவும் நீர் தேங்கும் பாத்திரங்கள் மற்றும் ஏதாவது பொருட்கள் இருக்குமாயின் அவை தகுந்த முறையில் அகற்றப்பட வேண்டும் என சுகாதார தரப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

காலைக்கதிர் Kalāikkathir

## பாதுகாப்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை - அக்குரேகொடவில் புதிய விமானப் படைத் தலைமையகக் கட்டடத்தை நேற்று திறந்துவைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விமானப் படைத் தலைமையகத்திற்குச் சென்ற முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு படையினரின் அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்பளிக்கப்பட்டது.

பெயர் படிகத்தைத் திரைநீக்கம் செய்து, விமானப்படையின் புதிய தலைமையத்தை திறந்துவைத்த பின்னர் ஜனாதிபதி, விமானப்படையின் மரியாதை அணிவகுப்பை பார்வையிட்டார். அதேநேரம், ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தும் நிமித்தமாக போர் விமானங்கள் வானில் பறந்தன. ஜனாதிபதி, விமானப் படையினருடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடியதுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

விமானப்படைக்கு இன்று (நேற்று) சிறப்பான நாளாகும். 73 வருட வரலாற்றில் இலங்கையில் உள்நாட்டுப் போர், கலவரங்கள், இயற்கைப் பேரிடர்கள் ஆகியவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க அளவற்ற அர்ப்பணிப்புக்களைச் செய்திருந்தனர். இன்று விமானப் படைக்கு புதிய தொழில்நுட்பத்துடன், புதிய தலைமையகம் கிடைத்துள்ளது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சவால்களை கையாள்வதற்குத் தேவையானதொழில்நுட்பஅறிவை இதனூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

எதிர்காலத்தில் இலங்கை இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு கேந்திர நிலையமாக மாறும்போது விமானப்படைமீதுபெரும்பொறுப்பு சாரும். அதேபோல் புதிய அறிவு மற்றும் தொழில்நுட்பத்துடன் எமது படையினர் முன்னோக்கிச் செல்லவேண்டும். சர்வதேசத்தில் ஏற்படக்கூடிய மோதல்களை முன்கூட்டியே அறிந்துகொண்டு, அதற்கு தீர்வு தேடுவதற்கான பாதுகாப்பு அறிவும் அதனூடாக கிடைக்கும்.

அதற்கமைய இராணுவத் தலைமைக வளாகத்துக்குள் விமானப்படைத்தலைமையகமும் நிறுவப்பட்டுள்ளமை அதற்கான அடிப்படை முயற்சியாக அமைந்துள்ளது. இதற்கு முன்பிருந்த விமானப்படைத் தலைமையகத்தை பொலிஸ் தலைமையகத்திற்கு வழங்க எதிர்பார்த்துள்ளோம். பொலிஸ் தலைமையகம், வெளிவிவகார அமைச்சு அமைந்துள்ள கட்டடம் ஆகியவற்றை விடுவித்து சுற்றுலா வலயமாக மாற்றத் திட்டமிட்டுள்ளோம்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய போராட்டத்தை எதிர்கொண்டுள்ளோம். நான் ஜனாதிபதியாக நாட்டைப் பொறுப்பேற்ற போது, நாட்டின் பொருளாதாரம் முழுமையாக சரிவடைந்திருந்தது.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும்பொறுப்புஎன்னிடம் ஒப்படைக்கப்பட்டது. இங்குஅரசியல் செய்வதா? இல்லாவிட்டால் நாட்டின் பொருளாதாரத்திற்காக பணியாற்றுவதா? என நேரடியாக அமைச்சரவையுடன் ஆலோசிக்க நேர்ந்தது.

பொருளாதாரவேலைத்திட்டத்தை இருவருடங்கள்காலம்தாழ்த்தியதால் லெபனான் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டது. அரசியல்ஸ்திரமற்ற நிலைமையினால் கிரேக்கம் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள 13 வருடங்கள் திண்டாடியது. அவர்கள், அரச ஊழியர்களின் சம்பளத்தை50சதவீதமாககுறைக்க நேர்ந்தது.

இருப்பினும் நாம் அந்த நிலைமைக்குச் செல்லவில்லை. சரிவடைந்து கிடந்த எமது மொத்த தேசிய உற்பத்தி எமது நேரடி தீர்மானங்களின் பலனாக முன்னேற்றம் கண்டது. 2023 ஆண்டு இறுதியில் ஓரளவு வலுவான பொருளாதார நிலைமை உருவாகியுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான தீர்மானங்களை, சரியான நேரத்தில் மேற்கொள்ள வேண்டும். இவ்வருடத்தில்நாட்டின்பொருளாதார வளர்ச்சி வேகம் 3 சதவீதமாக அமையும் என நம்புகிறேன். பின்னர் அதனை மிஞ்சிய வளர்ச்சி ஏற்படும். எமக்குஒத்துழைப்புவழங்க பல்வேறுநாடுகள் முன்வந்துள்ளன. எதிர்காலத்தில் இந்தக் கடன்களை செலுத்தும் இயலுமை எம்மிடம் உள்ளதா என்பதே அவர்களின் கேள்வியாகவுள்ளது. அதனால்நாம் புதிய வருமான வழிமுறைகளைத் தேடிக்கொள்ள வேண்டும்.

நாம் கடந்த வருடத்தில் 3.1 ட்ரில்லியன்களை வருமானமாக ஈட்டினோம். அது எமது மொத்த தேசிய உற்பத்தியில் 12 சதவீதமாகும். 2026ஆம் ஆண்டளவில் 15 சதவீதமாக மொத்த தேசிய உற்பத்தியைப் பலப்படுத்த வேண்டும். 2024ஆம் ஆண்டில் 4.2 ட்ரில்லியன்களை வருமானமாக ஈட்ட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அதற்காகவே வற் வரி மீண்டும் திருத்தம் செய்யப்பட்டது.

அதேபோல் தசம் 8 (0.8) அளவிளான தன்னிறைவை எதிர்பார்க்கிறோம். இருப்பினும் 2025 வரையில் அதனை 2.3 ஆக தக்கவைக்க வேண்டியதும் அவசியம்.அந்தஇலக்குகளுடனேயே முன்னோக்கிச் செல்ல வேண்டும். இது கடினமான இலக்கு. கஷ்டங்கள் உள்ளன. அது தொடர்பில் பல முறை சிந்தித்துள்ளேன். இந்தத் தீர்மானங்களை மேற்கொள்ளத் தவறினால்முன்னையபொருளாதார நிலைமையைநாம்மீண்டும்சந்திக்க நேரிடும். இந்த வேலைத்திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுக்கும் பட்சத்தில்நாட்டுக்கு நல்லஎதிர்காலம் கிட்டும். அதனால் நாட்டின் நலனுக்காக இந்த தீர்மானங்களை எடுத்தோம்.

மக்கள் செல்வாக்கைப் பெறுவதற்காக நான் ஜனாதிபதிப் பொறுப்பைஏற்றுக்கொள்ளவில்லை. நாட்டைகட்டியெழுப்பி,உங்களுக்கும் உங்களது பிள்ளைகளுக்கும் நல்ல எதிர்காலத்தை உருவாக்குவதே எனது நோக்கமாகும். அதனால் கடினமாக இருந்தாலும் சில தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. பிரதமருக்கும் அமைச்சரவைக்கும் அதுதொடர்பில்அறிவுறுத்தியுள்ளேன்.

அதேபோல் வரி சேகரிப்பில் பல்வேறு குறைப்பாடுகள் உள்ளன. அதற்காக புதிய வருமான அதிகார சபையொன்றை உருவாக்க சர்வதேச நாணய நிதியம் எமக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. அதனால் 2025 - 2026 ஆகும் போது பொருளாதார வளர்ச்சியை 5 சதவீதமாக மேம்படுத்த முடியும். இருப்பினும் அது போதுமானதல்ல. எதிர்கால சந்ததிக்காக 8-.9 சதவீதம் வரையிலான வளர்ச்சி இலக்கை அடைய வேண்டும். அந்த வளர்ச்சியை எவ்வாறு ஏற்படுத்த முடியும் என்பது தொடர்பிலேயே ஆராய்ந்து வருகிறோம். எவ்வாறாயினும், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான கடிமான தீமானங்கள் அனைத்தும் எடுக்கப்பட்டுள்ளன. விமர்சனங்களுக்குஉள்ளாகினாலும் நாட்டின் நலன் கருதிய தீர்மானங்களையே நாம் எடுத்துள்ளோம்.

நாட்டைப் பாதுகாப்பதற்கான பொறுப்புக்களை உணர்ந்து மற்றைய அரசியல்வாதிகளும் ஒன்றுபட வேண்டியது அவசியமாகும். அனைவரும் ஒன்றுபடும் பட்சத்தில் 2024 ஆம் ஆண்டுக்குள் நாட்டிற்குள் மிகத் துரிதமானஅபிவிருத்தியைஏற்படுத்த முடியும் என்பதில் சந்தேகமில்லை என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு மாகாண வளர்ச்சி மேம்பாட்டுக்காக ரூ. 48 ஆயிரத்து 223 மில்லியன் நிதி ஒதுக்கீடு

## ஆவணத்தில் கைச்சாத்திட்டார் கிழக்கு ஆளுநர்



2024 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாண வளர்ச்சி, மேம்பாடு மற்றும் அபிவிருத்திகளுக்காக மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் 48ஆயிரத்து 223 மில்லியன் (48,223,000,000.00) ரூபா ஒதுக்கீட்டிற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணத்தில் ஆளுநர் திங்கட்கிழமை கையொப்பமிட்டார்.

இதேவேளை, புத்தாண்டை முன்னிட்டு முதல் கட்டமாக முதல் நாளில் 101 நலத்திட்டங்களும் ஆளுநர் செந்தில் தொண்டமானால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதலமைச்சரின் அமைச்சு மற்றும் உள்ளூராட்சி மன்றம், கிராமிய அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில், விவசாயம் மற்றும் கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், போக்குவரத்து ஆணையம், சுற்றுலா பணியகம், கட்டடத் துறை வீட்டுவசதி ஆணையம், மாகாணதிட்டமிடல் செயலகம், கூட்டுறவு அபிவிருத்தி மீன்பிடி அமைச்சு, கல்வி மற்றும் கலாசார, முன்பள்ளி கல்வி பணியகம், விளையாட்டு அமைச்சு, சுகாதார மற்றும் சுதேச மருத்துவத் துறை, சிறுவர் நன்னடத்தை மற்றும் சமூக சேவைகள் அமைச்சு, வீதி அபிவிருத்தி மற்றும் காணி அமைச்சுகளுக்காக 101 நலத்திட்டங்கள் ஆளுநரால் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# லிற்ரோ சமையல் வாயு விலை உடனடியாக அதிகரிக்கப்பட்டது

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் லிற்றோ எரிவாயு விலையை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக லிற்றோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதன்படி , 2.3 கிலோ கிராம் லிற்றோஎரிவாயுசிலிண்டரின்விலை 127 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு அதன் புதிய விலை 795 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5 கிலோ கிராம் லிற்றோ எரிவாயு சிலிண்டரின் விலை 276 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு அதன் புதிய விலை 1,707 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

12.5 கிலோ கிராம் லிற்றோ எரிவாயு சிலிண்டரின் விலை 685 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு




அதன் புதிய விலை 4,250 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (05)

# சீன ஆய்வுக் கப்பல்களுக்கு அனுமதியில்லை; இந்தியாவிற்கு தகவல் தெரிவித்தது கொழும்பு

ஒருவருட காலத்திற்கு சீனாவின் ஆராய்ச்சி கப்பல்கள் தனது துறைமுகத்திற்குள் நுழைவதற்கு அனுமதி வழங்கப்போவதில்லை என இலங்கை இந்தியாவிடம் தெரிவித்துள்ளதாக இந்துஸ்தான் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கையின் துறைமுகத்திற்குள்ளும் விசேட பொருளாதார வலயத்திற்குள்ளும் சீனாவின் ஆராய்ச்சி கப்பல்கள் நுழைவதற்குஅனுமதிவழங்கப்போவதில்லை என கொழும்பு புதுடில்லியிடம் தெரிவித்துள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என இந்துஸ்தான்டைம்ஸ்தெரிவித்துள்ளது.

இது குறித்து இராஜதந்திர வட்டாரங்கள் ஊடாக இந்தியாவிற்கு இலங்கை தகவலை தெரிவித்துள்ளது என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக ஜனவரி ஐந்தாம் திகதி முதல் மே மாதம் வரை தென் இந்து சமுத்திர பகுதியில் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு சீனாவின் ஜியாங் யாங் கொங் 3 ஆராய்ச்சி கப்பலிற்கு இலங்கை அனுமதி வழங்காது என்பதே அர்த்தம் என இந்துஸ்தான் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

மாலைதீவின் கரையோர பகுதியில் ஆராய்ச்சியில்ஈடுபடுவதற்குகுறிப்பிட்ட கப்பலிற்கு அனுமதியளிக்கவேண்டும் என மாலைதீவு அரசாங்கத்திடம் சீனா வேண்டுகோள் விடுத்துள்ளது. சீனா சார்பு அரசாங்கம் மாலைதீவில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்து சமுத்திரத்திற்குள் சீனாவின் விஞ்ஞான ஆராய்ச்சி கப்பல்கள் ஏவுகணை கண்காணிப்பு கப்பல்களை அனுமதிப்பது அவற்றிற்கு துறைமுகங்களில் இடமளிப்பது குறித்து அமெரிக்காவும் இந்தியாவும் கொழும்பிற்கு கடும் எச்சரிக்கையை விடுத்துள்ளதை தொடர்ந்தே கடந்த வாரம் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் ஒரு வருட தடை குறித்து இந்தியாவிற்கு அறிவித்துள்ளது என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(05)

# மறுவாழ்வு உண்மையில் கிடைக்கிறதா...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கந்தகாடு போதைப்பொருள் மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து டிசம்பர் 11 போதைப்பொருள் குற்றவாளிகள் 139 பேர் தப்பிச் சென்றனர். ஆனால் இதுபோன்ற சம்பவம் நடப்பது இது முதல் முறையல்ல. ஜூன் 2022இல், சுமார் 400 'கைதிகள்' இதே மையத்திலிருந்து தப்பினர். குழுக்களுக்கு இடையேயான மோதல்களால் குற்றவாளிகள் தப்பிச் செல்லும் சம்பவங்கள் தொடர்வதாக ஊடக அறிக்கைகள் கூறினாலும், சில 'கைதிகள்' தாம் சிகிச்சைபெறும்போது தாக்கப்பட்டனர் எனவும் துன்புறுத்தப்பட்டனர் எனவும் கூறி, தங்களை விளக்கமறியலுக்கு அனுப்புமாறு கோருகின்றனர்.



2022இல் நடந்த சம்பவத்தின்போது, ஊடகங்களிடம் பேசிய குற்றவாளிகள் தாங்கள் தாக்கப்பட்டனர் என்ற குற்றச்சாட்டை முதன்மைப்படுத்தினர். இதே சிறைகளில் பல ஆண்டுகளாக பல கைதிகள் மர்மமான சூழ்நிலையில் இறந்துள்ளனர், இருப்பினும் தங்கள் சக கைதிகள் கொல்லப்பட்டனர் என்று சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர். ஆனால் இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டபோது, புனர்வாழ்வு முகாமில் இருந்து தப்பியோடியவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விசாரணை நடத்தப்படும் என்று அதிகாரிகள் பதிலளித்தனர். எனினும், இந்த விசாரணைகளின் முடிவுகள் மக்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை.

இவ்வாறான பலவந்தமான சிகிச்சைகள் போதை அடிமைகள் மீண்டும் மீண்டும் அந்த சிகிச்சை நிலையத்திற்கு வருவதற்கான வாய்ப்புகளை விரைவுபடுத்துகின்றன. அத்தோடு கந்தகாடு போதைப்பொருள் மறுவாழ்வு நிலையத்திற்கு அனுப்பப்படும் குற்றவாளிகள் தொடர்ந்தும் தப்பிச் செல்கின்றனர்.

மறுவாழ்வு நிலையத்தில் இருந்தவர்கள் படையினரால் தாக்கப்பட்டுள்ளனர் என்பது மிகவும்தெளிவாக உள்ளது என்று மூத்த மனித உரிமை ஆர்வலர் பிரிட்டோ பெர்னாண்டோ கூறினார். அவர்கள் தங்களை விளககமறியல் சிறைக்கு அனும்பும்படி கோருகிறார்கள், அப்படிச் செய்வதால் நிலைமை மேம்படும் என்று அர்த்தமல்ல. போதைப்பொருள் குற்றவாளிகள் மற்ற குடிமக்களைவிட சிறப்பாக நடத்தப்படவேண்டும். ஆனால் 1971 முதல், பல்வேறு ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் சிறையிலோ அல்லது வேறு ஏதேனும் தடுப்பு மையத்திலோ தடுத்து வைக்கப்படுபவர்கள் எதிர்கொள்ளும் கொடூரங்களை அம்பலப்படுத்தியுள்ளன. சில குழுக்கள் சட்ட வரம்புகளுக்கு அப்பால் சென்றுவிட்டன. எனவே குற்றவாளிகள் சிறைச்சாலைக்குள் மட்டுமே தங்களுக்கு பாதுகாப்பான இடம் என்று இப்போது உணர்கிறார்கள் என்று பெர்னாண்டோ கூறினார்.

ஒரு நபர் போதைப்பொருள் அடிமையா அல்லது போதைப்பொருள் வியாபாரியா என்பதை நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்றும் பெர்னாண்டோ மேலும் கூறினார். ''குற்றவாளிகள் தற்போதுள்ள முறைமையின் கீழ் மறுவாழ்வு பெற மறுத்தால், புதிய மறுவாழ்வுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவேண்டும் என்று நான் நம்புகிறேன். உண்மையில் போதைப்பொருள் குற்றவாளிகளின் உரிமைகளுக்காகப் பேசுபவர்கள் குற்றவாளிகளுக்கு ஆதரவானவர்கள் என்று முத்திரை குத்தப்படுவார்கள். இனப்பிரச்சினை மற்றும் போரின் உச்சக்கட்டத்தில் தமிழ்ப் பொதுமக்களின் உரிமைகளுக்காக நின்றவர்கள் தீவிரவாதிகள் என்று முத்திரைகுத்தப்பட்டதைப் போன்றே. இந்தக் கருத்து சாதாரணமாகி வருகிறது, ஆனால் இந்தக் குற்றவாளிகள் எதிர்கொள்ளும் மனித உரிமை மீறல்களைப் பற்றி யாராவது பேசவேண்டும்" என்று அவர் மேலும் கூறினார்.

மக்கள் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி சேனக பெரேரா, புனர்வாழ்வு செயற்பாடுகள் ஏன் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தினார். ஒரு கைதி அல்லது போதைப்பொருள் குற்றவாளி ஒரு பயனுள்ள புனர்வாழ்வு செயல்முறையின் மூலம் சென்றால், அந்த நபர் முந்தைய பழக்கங்களை மீண்டும் மீண்டும் செய் வதற்கான வாய்ப்புகள் குறைவு. ஆனால் தற்போதுள்ள மறுவாழ்வுத் திட்டம் திருப்திகரமாக இல்லை. புனர்வாழ்வு மையம் என்பது உண்மையில் ஒரு சீர்திருத்த மையமாகும், அங்கு அது கைதிகளின் காவலையும் பராமரிப்பையும் வழங்கும் அதே வேளையில் அவர்களின் நடத்தைகளை சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைக்க வேண்டும், என்று பெரேரா கூறினார்.

"சிறையிலோ அல்லது வேறு எந்த மறுவாழ்வு மையத்திலோ கைதிகளுக்கு பல்வேறு தொழில்கள் கற்பிக்கப்படுவதால் அவர்கள் முழுமையாக மறுவாழ்வு பெறுவார்கள் என்று அர்த்தமில்லை. உளவியல் அம்சம் மிகவும் முக்கியமானது. அவர்களுக்கு முறையான மனநல ஆலோசனைகள் வழங்கவேண்டும். ஒரு கைதி விடுவிக்கப்பட்டதும், விடுதலைக்குப் பிந்தைய கண்காணிப்பும் இருக்கவேண்டும்" என்று பெரேரா மேலும் கூறினார்.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ன ஹெட்டியாராச்சியிடம் இது தொடர்பில் வினவியபோது, கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பப்படும் பெரும்பாலானோர் 10 முதல் -15 வருடங்களாக போதைப்பொருள் பாவனையாளர்களாக இருந்தவர்கள், ''எனவே முதல் ஓரிரு மாதங்களில் அவர்கள் போதைப்பொருள் இல்லாமல் இருப்பது மிகவும் கடினம். அவர்கள் அடிப்படையில் போதைப்பொருளில் வாழ்கிறார்கள். சில சமயம் பண்டிகைக் காலங்களில் வீட்டுக்குச் செல்வார்கள், சிலர் திரும்பி வருவதில்லை. அவர்கள் மறுவாழ்வு மையத்தில் இருந்து தப்பிப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன'' என்று மேஜர் ஜெனரல் ஹெட்டியாராச்சி கூறினார்.

எவ்வாறாயினும், போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு புனர்வாழ்வளிக்க இராணுவ சிகிச்சையைப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுவதை மேஜர் ஜெனரல் ஹெட்டியாராச்சி மறுத்தார். "கைதிகளுக்கு பல்வேறு வகையான உளவியல் சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்க எங்களுடன் பணியாற்றும் வல்லுநர்கள் எங்களிடம் உள்ளனர். இது தனிநபர் மற்றும் குழு சிகிச்சை, இசை சிகிச்சை, நீர் சிகிச்சை மற்றும் பல வடிவங்களில் செய்யப்படுகிறது.

போதைக்கு அடிமையான சிலர் தங்கள் பெற்றோரைக் கொல்ல முயன்றுள்ளனர். சிலருக்கு புத்தி பேதலித்திருக்கிறது. எனவே அவர்கள் தப்பிச் செல்ல முயலும்போது நாங்கள் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தலாம் என்று நினைக்கிறீர்களா", என்று ஹெட்டியாராச்சி கேள்வி எழுப்பினார். நாங்கள் எல்லா நேரத்திலும் குறைந்தபட்ச சக்தியைப் பயன்படுத்த முயற்சிக்கிறோம். அவர்கள் சீருடையைக் கண்டால் அமைதியாக இருப்பார்கள் என்று நாங்கள் நம்புவதால் அவர்களை ஓரளவு கட்டுப்படுத்த ராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் அவர்களுடன் பழகும்போது பொறுமையாக இருக்கவேண்டும் என்று இராணுவத்தினருக்குப் பயிற்றுவிக்கப்பட்டுள்ளது" என்று அவர் மேலும் கூறினார்.

சிறைவாசிகள் மையத்திற்கு வந்தவுடன் கால அட்டவணையின்படி வேலை செய்ய வேண்டும். கந்தகாடு மையத்தில் ஒரு வழக்கமான நாளில், கைதிகள் காலை 5.00 மணிக்கு எழுந்திருக்க வேண்டும், காலைக்கடன் முடிக்கவேண்டும், உடல் பயிற்சி செய்ய வேண்டும், காலை உணவு சாப்பிட வேண்டும், ஒரு ஆலோசனை அமர்வுக்கு வரவேண்டும், அதைத் தொடர்ந்து ஒரு விரிவுரை, மதிய உணவு, மற்றொரு விரிவுரை, விளையாட வேண்டும். பிறகு குளித்துவிட்டு, தொலைக்காட்சி பார்த்துவிட்டு, இரவு உணவு சாப்பிட்டுவிட்டு இரவு 10.00 மணிக்கு படுக்கைக்குத் திரும்பவேண்டும்.

ஒவ்வொரு கைதிக்கும் புனர்வாழ்வு காலம் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படுவதாக ஹெட்டியாராச்சி மேலும் தெரிவித்தார். இது ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருடம். ஆறு மாதங்களின் முடிவில், ஒரு நபர் சமூகத்திற்குத் திருப்பி அனுப்பப்படுவதற்குத் தகுதியானவரா என்பதைச் சரிபார்க்க நாங்கள் ஒரு மதிப்பீட்டை நடத்துகிறோம். அவர்கள் மதிப்பீட்டில் தோல்வியுற்றால், அவர்கள் மேலும் ஆறு மாதங்களுக்குத் தக்கவைக்கப்படுவார்கள்" என்று அவர் கூறினார்.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் தற்போது 485 கைதிகள் உள்ளனர். போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் கந்தகாடு போதைப்பொருள் மறுவாழ்வு நிலையத்திற்கு அனுப்பப்படும் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதா என வினவியபோது, ஹெட்டியாராச்சி உறுதிமொழியாக பதிலளித்தார். உதாரணமாக கம்பஹா நீதவான் நீதிமன்றில் இருந்து பெருமளவிலானவர்கள் அனுப்பப்படுகின்றனர், என்று அவர் கூறினார். போதைப்பொருள் மற்றும் பாதாள உலகத்தை ஒழிப்பதற்கான 'யுக்திய' (நீதி) நடவடிக்கையை பொது பாதுகாப்பு அமைச்சர் சமீபத்தில் தொடங்கினார், அதைத் தொடர்ந்து இந்த மறுவாழ்வு மையத்திற்கு அனுப்பப்படுபவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

**(மூலம்: டெய்லி மிரர்)**


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

# அம்பாறை மாவட்ட கடற்கரையோரங்களில் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்ற கோரிக்கை



அம்பாறை மாவட்ட கடற்கரையோரங்களில் அடைமழை காரணமாக பிளாஸ்டிக் மற்றும் இறந்த தாவரங்களின் கழிவுகள் அதிகளவாகக் காணப்படுகின்றனஎனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அடைமழை காரணமாக ஏற்பட்ட வெள்ள நீர் வடிந்தோடுவதற்காக தற்காலிகமான கால்வாய்கள் கடலை நோக்கி வருவதால் இவ்வாறான கழிவுகள் அதிகளவாக கடற்கரையில் கரை ஒதுங்கி நிறைந்து காணப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் பெரிய நீலாவணை, பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, மாளிகைக்காடு உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறான கழிவு தென்பட்டுள்ளன.

இவ்வாறான கழிவு பரவலானது கரையோர மீனவர்களது மீன்பிடிதொழிலுக்கு பெரும் சிரமங்களைக் கொடுப்பதுடன்வலைகளிலும் சிக்குகின்றன.

எனவேபொறுப்புவாய்ந்த அதிகாரிகள் இவ்விடயத்தில் உடனடியாக தலையிட வேண்டும் என பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## பிறந்து சில நாள்களேயான சிசுவின் சடலம் ஆற்றில் மீட்பு

*பண்டாரவளை பிரதேசத்தில் உள்ள ஆற்றிலிருந்து, பிறந்து சில நாள்களேயான சிசு ஒன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.*

*பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.*

*உயிரிழந்த சிசுவின் தாய் தொடர்பில் தகவல்எதுவும்இதுவரைகண்டறியப்படவில்லை.*

*இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

*(05)*

## எலிக் காய்ச்சலால் இளைஞர் வவுனியாவில் பரிதாபச் சாவு

வவுனியாவில் எலிக்காய்ச்சல் காரணமாக இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞருக்கு சில தினங்களாக காய்ச்சல் இருந்துள்ளது. இதனையடுத்து செட்டிகுளம் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக அங்கிருந்து வவுனியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்நிலையில்சிகிச்சைபலனின்றி குறித்த இளைஞர் ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்தார்.

இதன்பின் சட்ட வைத்திய அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுபரிசோதனையில் குறித்த இளைஞன் எலிக்காய்சல் காரணமாக மரணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)



## முந்தல் பிரதேசத்தில் இரு கார்கள் மோதி விபத்து; பத்துப் பேர் காயம்

முந்தல்நகருக்கு அருகில் இரண்டு கார்கள் மோதி விபத்துக்குள்ளானதில் பத்து பேர் காயமடைந்து சிலாபம் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரத்திலிருந்து நீர்கொழும்பு நோக்கி பயணித்த காரும் சிலாபத்திலிருந்து முந்தல் நோக்கி வந்த காரும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இந்த விபத்தில் மூன்று சிறுவர்கள், ஐந்து பெண்கள் மற்றும் இரண்டு ஆண்கள் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். முந்தல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், காயமடைந்தவர்கள் உடனடியாக மூன்று அம்புலன்ஸ்களில் சிலாபம் பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (05)

## சிபெட்கோ விலைய விட 3 ரூபாவால் குறைத்து எரிபொருளை விற்பனை செய்யும் சினோபெக்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (சிபெட்கோ) விலையை விட 3 ரூபா குறைவாக 92 ஒக்டேன் பெற்றோல் மற்றும் ஒட்டோ டீசலை விற்பனை செய்ய சினோபெக் தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஒக்டேன் 92 பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை 17 ரூபாவால் அதிகரித்து அதன் புதிய விலை 363 ரூபாவாகவும், ஆட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 26 ரூபாவால் அதிகரிக்கப்பட்டதன்பின்னர் புதிய விலை 355 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒக்டேன் 95 லீற்றர் ஒரு லீற்றர் 38 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 464 ரூபாவாகவும், சுப்பர் டீசல் லீற்றர் 41 ரூபாவால் அதிரகிகப்பட்டு 475 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (05)

# அடிப்படையான நிலைப்பாடுகளில் தாயகம் சமரசம் செய்யமுடியாது

### நாடு கடந்த தமிழீழ அரசு தெரிவிப்பு

அடிப்படை நிலைப்பாடுகளில் ஈழத் தமிழர் தேசம் சமரசம் செய்ய முடியாது என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் ருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

2024 புத்தாண்டு செய்தியில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் ருத்திரகுமாரன் தமிழீழ தேசிய பிரச்சினை திம்புக்கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்க்கப்படவேண் டும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அக்கோட்பாடுகளின் அடிப்படையில் பல்வேறு புலம்பெயர் அமைப்புகள் ஒன்றிணைந்து 2021செப்ரெம்பர் மாதம் 23 உருவாக்கிய பொது நிலைப்பாடுகள் எந்த ஓர் அரசியல் தீர்விற்கும் வகிபாகமாக இருக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 2024 இல் பல முக்கிய இடங்களில் தேர்தல்கள் இடம்பெறவுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அவர், இந்திய தேர்தல்தொடர்பில் அரசியல் கட்சிகள் மத்தியில் நமக்கு சாதகமான நிலைப்பாட்டை எடுக்கச்செய்து அவற்றைத் தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ளடக்க உள்ள வாய்ப்புகள் குறித்து தமிழ் மக்கள்கவனம்கொள்ளவேண்டும் எனத் தெரிவித்;துள்ளார்.

இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் குறித்து தெரிவித்துள்ள அவர், தமிழ் மக்கள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மக்கள் என்ற நிலையிலிருந்து கொண்டு தேர்தலை எதிர்கொள்ளும் வாய்ப்புகள் குறித்து சிந்திக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போது பாலஸ்தீனத்தில் நடைபெறும் அனர்த்தங்கள் ஐக்கிய நாடுகள் உட்பட சர்வதேச அமைப்புகள் நீதியை நிலைநாட்டத் திராணியற்றவை என்பதை வெளிப்படுத்தியுள்ளது நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உலகில்நீதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட புதிய பொறிமுறைகளையும் புதிய நியதிகளையும் உருவாக்குவதற்கான முயற்சியில் உலகின் ஏனைய அரசற்ற தேசங்கள் அனைத்துலக சிவில் சமூகம் அறிவு ஜீவிகள் சமூகவலைத்தளங்கள் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எமது சூழலை எடுத்துக் கொண்டால் கடந்த ஆண்டில் அனைத்துலக அரசுகள் சிலவற்றின் அரவணைப்புடன் இமாலய பிரகடனம் என்றபெயரில் இடம்பெற்ற அரசியல் பித்தலாட்டம் ஒன்றையும் காண முடிந்தது. என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இம்பிரகடனமும் அதனைத் தொடர்ந்துஇடம்பெற்றகாட்சிகளும் எந்த வகையிலும் தமிழ் மக்களின் நன்மை கருதியதாகத் தெரியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் டயஸ்பொறாவின் தமிழ்தேசிய நிலைப்பாட்டையும் தமிழ்தேசத்தின் சுயநிர்ணய உரிமை போராட்டத்திற்கு சார்பான நிலைப்பாட்டையும் நீர்த்துப்போகச்செய்ய விரும்பும் முயலும் அனைத்துலக அரசுகள் சிலதமக்குசேவைசெய்யக்கூடியவர்களை இந்த பிரகடனத்திற்காக தெரிவு செய்துள்ளதாகத் தெரிகின்றது என குறிப்பிட்டுள்ள அவர் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள் எவரும் எந்த வகையிலும் தமிழ் மக்களின் அரசியல் விருப்புகளை பிரதிபலிப்பவர்கள் அல்லர் எனவும் தெரிவித்துள்ளார்.

இதனால் இவர்களின் எந்த பிரகடனமும் தமிழ் மக்களிற்கு ஒரு பொருட்டு இல்லை இதனை தாயகத்திலும்டயஸ்பொறாவிலும் இருந்து வந்த கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

## வடக்கில் 90 வீத குற்றங்களை கட்டுப்படுத்திவிட்டோம்: 6 மாதங்களுக்குள் போதைப் பொருளையும் ஒழிப்போம்

### வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் உத்தரவாதம்

வடக்கில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுவோரை அடையாளம் கண்டுள்ளதாகவும், அவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல்தயாரிக்கப்பட்டுள்ளநிலையில் அவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஹிந்த குணரத்ன தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

எதிர்வரும் ஜூன் மாத காலப்பகுதிக்குள் வடக்கில் போதைப்பொருள் ஒழிக்கப்படும். போதைப்பொருள் விற்பனை, போதைப்பொருள் நுகர்வு ஆகியவற்றில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுகின்றனர். அவர்களுக்குஎதிராகச்சட்டநடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கையால் வடக்கில் 90 சதவீதம் குற்றச் செயல்கள் சடுதியாகக் குறைந்துள்ளன.

குற்றச் செயல்களில் ஈடுபடும் மற்றும்போதைப்பொருள்வியாபாரத்தில் தொடர்புடையவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்கள் விரைவில்கைது செய்யப்படுவார்கள்.

பதில் பொலிஸ் மா அதிபர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோர் எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் செயற்பாடுகளை ஒழிப்பதை இலக்காகக் கொண்டுள்ளனர். அதற்குரிய நடவடிக்கைகள் வடக்கிலும் முன்னெடுக்கப்படுகின்றன.

போதைப்பொருள் விற்பனை செய்வோர் தொடர்பாக 0718598834 (யாழ்ப்பாணம்), 0718598835 (காங்கேசன்துறை), 0718598836 (வவுனியா), 0718598837 (மன்னார்), 0718598838 (கிளிநொச்சி), 0718598839 (முல்லைத்தீவு) என்ற இலக்கங்களுக்குத் தெரியப்படுத்த முடியும்.

இந்த இலக்கங்களுக்கு அழைப்பெடுப்பவர்களின் விவரங்கள் தெரியவராது. அதனால் அச்சமின்றி தகவல்ளை வழங்க முடியும். அத்துடன் வடமாகாண பிரதிப்பொலிஸ்மா அதிபர் காரியாலயத்திலும் நேரடி யாக முறையிடலாம் என மேலும் தெரிவித்தார் .(05)

# பிரபல போதைப்பொருள் வர்த்தகரின் ஹோட்டல் கொழும்பு தெஹிவளை பகுதியில் அகற்றப்பட்டது

*பிரபல போதைப்பொருள் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான கொழும்பு தெஹிவளை பகுதியில் அமைந்துள்ள ஹோட்டலொன்று சட்டவிரோதமான முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டதையடுத்து அதனை அங்கிருந்து அகற்ற பொலிஸார் நேற்று நடவடிக்கை எடுத்தனர்.*

*இதனிடையே கடலோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த ஹோட்டலின் பணிப்பாளர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர்.*

*தெஹிவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரையோர பகுதியில் அமைந்துள்ள ஹோட்டலொன்று தற்போது வெளிநாட்டில் தலைமறைவாக இருக்கும் பிரபல போதைப்பொருள் வர்த்தகரான ஷிரான் பாசிக்கு சொந்தமானது என அடையாளம் காணப்பட்டுள்ளது.*

*அதற்கமைவாக விசாரணை மேற்கொண்ட பொலிஸார் குறித்த ஹோட்டல் கடலோர பாதுகாப்பு சட்டங்களை மீறி சட்டவிரோதமான முறையில் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகக் கண்டுபிடித்துள்ளனர்.*

*இதனை தொடர்ந்து பொலிஸார், கடலோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் அதிகாரிகளால் பெக்கோ இயந்திரங்களைக் கொண்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.*

*இதனிடையே கடலோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த ஹோட்டலின் பணிப்பாளர் உட்பட மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், குறித்த போதைப்பொருள் வர்த்தகர் தொடர்பில் பொலிஸ் சட்டவிரோத சொத்து குவிப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளைமுன்னெடுத்துள்ளனர்.*

*(05)*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.01.2024இல் வெளியிடப்பெற்றது.